2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஏ) காஞ்சிபுரம், அத்திவரதர் தரிசன விழா, பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அத்திவரதர் காட்சி தருகிற வகையில் ஒரு விழா தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு மிகப் பெரிய அளவிலே மக்கள் நிரம்ப கூடக்கூடிய வகையிலே, அந்த விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த விழாவைக் காண்பதற்கும், அந்த உற்சவத்தைக் கண்டு ரசிக்கவும், பொதுமக்கள் தொடர்ந்து காலையிலும், மாலையிலும் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆக ஒரு நாளைக்கு 4 இலட்சம், 5 இலட்சம் மக்கள் திரள்கிறார்கள் என்று செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அங்கு வந்து செல்லக்கூடியவர்களுக்கு முறையான பாதுகாப்பு, பொதுக் கழிப்பிடங்கள் உள்ளிட்ட பல வசதிகள் இல்லையென்ற ஒரு நிலை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். இன்று காலையில் கூட்ட நெரிசலில் சிக்கி, மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் 31 பேர் மயக்கமுற்று, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஒரு மணி நேரத்திற்கு முன்னர், மூன்று பேர் அல்லது நான்கு பேர் இறந்திருப்பதாகவும், மேலும் ஐந்து பேர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் செய்தி வந்திருக்கின்றது. இந்தச் செய்தி அரசுக்கு வந்திருக்கிறதா? நான் கேட்க விரும்புவது, இன்னும் கூட்டம் அதிகமாகத்தான் வரப்போகிறது. நம்முடைய தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, பக்கத்திலிருக்கக்கூடிய மாநிலங்களிலிருந்து, ஏன் வெளிநாடுகளிலிருந்தும்கூட மக்கள் வந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதற்குரிய பாதுகாப்பை இந்த அரசு வழங்கிட வேண்டும் என்று கேட்டு, உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாக உதவித் தொகையை, நிவாரணத் தொகையை வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் கேட்டு அமைகிறேன்.*

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில் அத்திவரதரை தரிசனம் செய்ய வருகின்ற பக்தர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதேபோன்று, உயிரிழந்தவர்களுக்கு உதவித் தொகை, நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்கள். நான் முழு விவரங்களையும் கேட்டிருக்கின்றேன். முழு விவரங்களும் வந்தவுடன் அவைக்கு தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று*

@ *716 முதல் 767 வரையிலான பக்கங்களில் இணைப்பு* IV *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மக்கள் மனங்களை வென்று நாடாளுமன்றத் தேர்தலிலே மாபெரும் வெற்றியைத் தேடித்தந்த தி.மு.கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, வாருங்கள், நல்லாட்சி தாருங்கள், சிறுபான்மையினருக்கு நன்மை தாருங்கள். சபாநாயகர் அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வாழ்த்துக்கள்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஏ) காஞ்சிபுரம், அத்திவரதர் தரிசன விழா, பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் அத்திவரதரை தரிசிக்க வருகை தருகின்ற பக்தர்களுக்குத் தேவையான வசதி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதைப் பற்றி, இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கேள்விக்கு நான் இங்கே விளக்கம் அளிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள அனந்தசரஸ் குளத்திலிருந்து 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை எழுந்தருளும் ஸ்ரீ ஆதி அத்திவரதர், தற்போது 1–7–2019 முதல் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். இந்த வைபவம் 17–8–2019 வரை நடைபெறவுள்ளது.

கலந்தாய்வுக் கூட்டங்கள்

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், தனித் தனியாக 19–4–2019, 4–5–2019,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 18

11–6–2019, 15–6–2019 ஆகிய நாட்களில் முன்னேற்பாடு தொடர்பான கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், 27–6–2019 அன்று தலைமைச் செயலகத்தில் உயர்மட்டக் கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து துறைகளின் முன்னேற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன.

பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதியாக தரிசனம் செய்ய கீழ்க்கண்ட முன்னேற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளன:

பொதுமக்களை மழையில் இருந்தும், வெயிலில் இருந்தும் பாதுகாக்க, அவர்கள் வரிசையில் நிற்கும் பகுதிகளில், சுமார் 1,200 மீட்டர் நீளத்திற்கு தற்காலிக நிழற்கூடம் ஏற்படுத்தப்பட்டு, அதில் மின் விளக்குகள், மின்விசிறி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோயிலின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் நிரந்தர மேற்கூரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிகரித்து வரும் கூட்டத்தைக் கருத்தில்கொண்டு, இராஜ கோபுரத்தின் இடப்பகுதியில் அமைந்துள்ள தோட்டப் பகுதியில் சுமார் 8,000 நபர்கள் நின்று செல்லும் வகையில், பிரம்மாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் வருவோர் ஆகியோருக்கு தனியே ஒரு சிறப்பு வழி அமைக்கப்பட்டு, அவர்கள் விரைவில் தரிசனம் செய்து வருகின்றனர். அங்கே 150 சக்கர நாற்காலிகள் வசதியும் செய்யப்பட்டுள்ளது. கிழக்கு இராஜ கோபுரம் முதல் பிரகாரம் வரை 8 பேட்டரி கார்கள் மற்றும் 2 மோட்டார் வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

அர்ச்சனையுடன்கூடிய சிறப்பு தரிசனத்திற்கு இணையதளம் மூலமாக முன்பதிவு செய்யப்பட்டு, மேற்கு கோபுரம் வழியாக தினமும் காலையில் 1 மணி நேரமும், மாலையில் 1 மணி நேரமும் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள்

இவ்விழாவில் ஸ்ரீ அத்திவரதரை தரிசிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவில் பக்தர்கள் தினசரி வருகை புரிந்து வருகின்றனர்.

2019 ஜூலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நாள் ஒன்றுக்கு சுமார் 1 இலட்சம் முதல் 1.50 இலட்சம் பக்தர்கள் வரையும், விடுமுறை நாட்களில் சுமார் 2 இலட்சம் பக்தர்கள் வரையும் ஸ்ரீ அத்திவரதரை தரிசிக்கின்றனர்.

17–7–2019 அன்று வரை சுமார் 22 இலட்சம் பக்தர்கள் ஸ்ரீ அத்திவரதரை தரிசித்துள்ளனர்.

இன்று (18–7–2019) வியாழக்கிழமை அன்று மாலை 4 மணி நிலவரப்படி 1.7 இலட்சம் பக்தர்கள் தரிசனம் செய்திருக்கின்றார்கள். இன்றையதினம் திருவோணம் நட்சத்திரம் என்ற காரணத்தினாலே, அதிகப்படியான பக்தர்கள் இன்றைக்கு சாமி தரிசனம் செய்ய வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிடுகிறேன்.

இரவு 7–40

இதுவரை 1,92,982 பேருந்து, வேன், கார் போன்ற வாகனங்கள்மூலம் பக்தர்கள் தரிசனத்திற்காக காஞ்சிபுரம் வந்து சென்றுள்ளனர். இவ்விழா சிறப்பாக நடைபெறும்வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி வடக்கு மண்டல காவல் துறை தலைவர் அவர்களின் மேற்பார்வையில், 1 காவல் துறை துணைத் தலைவர், 7 காவல் கண்காணிப்பாளர்கள், 4 காவல் கூடுதல் கண்காணிப்பாளர்கள், 40 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 98 காவல் ஆய்வாளர்கள், 3,300 காவலர்கள் தினந்தோறும் சுழற்சி முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயில் வளாகத்திலேயே ஒரு சிறப்பு காவல் கட்டுப்பாட்டு அறை, 9 காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 13 கண்காணிப்புக் கோபுரங்கள், 27 குற்றத் தடுப்புப் பிரிவுகள், வெடிகுண்டு கண்டறிந்து தடுக்கும் 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 46 இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறது.

தேசிய சமுதாயப் பணி மாணவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் பக்தர்களுக்கு குடிநீர் வழங்குதல், வரிசையை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளில் காவல் துறைக்கு துணையாக பணியாற்றி வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள்

போக்குவரத்து நெரிசல் ஏற்படாவண்ணம் 3 தற்காலிகப் பேருந்து நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் நகரத்தில் பல்வேறு இடங்களில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டும், பேருந்து வழித்தடங்கள் முறைப்படுத்தப்பட்டும் உள்ளன. 3 தற்காலிகப் பேருந்து நிலையங்களிலிருந்து கோயிலுக்கு பக்தர்களை ஏற்றிச் செல்ல 30 சிற்றுந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மருத்துவ வசதிகள் ஏற்பாடு

பொது மக்களின் வசதிக்காக 10 சிறப்பு மருத்துவ முகாம்களும், 20 நடமாடும் மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 200 மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், சுழற்சி முறையில் பணிபுரிகின்றனர். தேவையான மருந்துகள் போதிய அளவில் இம்முகாம்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 17,000 நபர்கள் இம்முகாம்களைப் பயன்படுத்தியுள்ளனர். 108 ஆம்புலன்சுடன்கூடிய 10 தற்காலிக மருத்துவ அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 10 sintex தொட்டிகளில் உப்பு—சர்க்கரைக் கரைசல் வைக்கப்பட்டு, பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் மக்கள் வருவதைக் கருத்தில்கொண்டு, 14—7—2019 முதல் 10 இரு சக்கர ஆம்புலன்ஸ் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக அதிகமாக மக்கள் வந்து சென்றாலும், தொற்று நோய் ஏற்படாவண்ணம் முன்னெச்சரிக்கையாக bleaching powder தெளிப்பது, கொசு மற்றும் ஈ வராமல் தடுக்க மருந்து தெளிப்பது போன்ற நடவடிக்கை தினந்தோறும் செய்யப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள உணவகங்களில் உள்ள உணவுப் பண்டங்களின் மாதிரிகள் தினமும் எடுக்கப்பட்டு, அவற்றின் தரம் சரிபார்க்கப்படுகிறது.

தீயணைப்பு முன்னேற்பாடுகள்

5 தீயணைப்பு வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு, துணை இயக்குநர் தலைமையில் 250 தீயணைப்பு வீரர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

குடிநீர் மற்றும் கழிவறை வசதி

கோயிலுக்கு உட்புறத்தில் 2 சுத்திகரிப்பு இயந்திரங்களும், வெளிப்புறத்தில் 4 சுத்திகரிப்பு இயந்திரங்களும் பொருத்தப்பட்டு,

2019 ஜுலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நகரிலுள்ள பிற முக்கியப் பகுதிகளில் 6 புதிய இயந்திரங்களும் பொருத்தி, குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கோயிலுக்குள் 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் கோயில் வெளிப்புறத்தில் 10 இடங்களிலும், நகரின் 85 முக்கியப் பகுதிகளிலும் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. வரிசையில் காத்திருக்கும் பக்தர்களின் வசதிகளைக் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு 50 மீட்டர் இடைவெளியில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டு, அதை டம்ளர் கொண்டு தன்னார்வலர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களில் நீர் மாதிரிகள் எடுத்து கிண்டி கிங் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சோதனை முடிவுகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளில் ஆண், பெண் இருபாலருக்கும் தலா 11 வீதம் 22 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் 110 கழிப்பிடங்கள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் நகரத்தில் சின்ன காஞ்சிபுரம் பகுதியில் கூடுதலாக 36 எண்ணிக்கையிலும், பெரிய காஞ்சிபுரம் பகுதியில் கூடுதலாக 92 எண்ணிக்கையிலும் நகரும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவில் வருகின்ற பக்தர்கள் வசதிக்காக 8–7–2019 முதல் கோயில் வளாகப் பகுதியில் 20 கழிப்பறைகளும், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு தனியே 5 கழிப்பறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாளும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் விட்டுச் செல்கின்ற குப்பைகள், இரவு 11 மணி முதல் காலை 4 மணி வரை சுகாதாரப் பணியாளர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

சிறப்பு விவரங்கள்

இந்த வைபவ நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறைத் தலைவர், கண்காணிப்பாளர் மற்றும் இதர துறை அலுவலர்கள் தினமும் இரவில், அன்றன்று கண்டறியப்பட்ட குறைகள் என்னவென்று ஆய்வு செய்து, அடுத்த நாள் நிவர்த்தி செய்து, பொது மக்கள் மற்றும் பக்தர்களுக்குத் தேவைப்படும் கூடுதல் வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 18

இதுமட்டுமல்லாது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசுத் துறை செயலர்களும், துறைத் தலைவர்களும் அவ்வப்போது காஞ்சிபுரத்திற்குச் சென்று, பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அதனை உடனுக்குடன் நிவர்த்தி செய்து, கூடுதல் வசதிகளைச் செய்து தருகின்றனர். எனவே, இந்த வைபவம் தொடங்கிய நாள் முதல் கடந்த 17 நாட்களாக அருள்மிகு ஸ்ரீஅத்திவரதர் வைபவ நிகழ்ச்சி விரிவான முன்னேற்பாடுகள் காரணமாக, பொது மக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சுமுகமாக சிறப்பான தரிசனம் செய்து வருகின்றனர். இன்று வரை, எவ்வித அசம்பாவிதமும், தொற்று நோய்களும் பரவா வண்ணம் மாவட்ட நிருவாகமும், காவல் துறையினரும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையும், சுகாதாரத் துறையும் பிற துறையினரும் செவ்வனே கடமையாற்றி வருகின்றனர்.

இரவு 7—45

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும், அவ்வப்போது எடுத்துவரும் சிறப்பு நடவடிக்கைகளாலும் பொது மக்கள் மற்றும் பக்தர்கள் சிறப்பாக அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்து வருகின்றனர் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அருள்மிகு ஸ்ரீஅத்திவரதரை திருவோண நட்சத்திரமான இன்று தரிசனம் செய்ய சுமார் 1.7 இலட்சம் பக்தர்கள் வந்திருந்தனர்.

அருள்மிகு ஸ்ரீஅத்திவரதரை தரிசனம் செய்ய வருபவர்களில் பெரும்பாலானவர்கள் 50 வயதைக் கடந்தவர்கள். இன்று ஆவடியைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மனைவி திருமதி நாராயணி (வயது 55), அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்தபின், வீடு திரும்பும்போது உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், தமிழ்நாடு அரசு அமைத்திருந்த மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள் இவருக்கு ஏற்கெனவே இரத்தக் கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் உள்ளது எனவும், சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார் எனவும் தெரிவித்தனர்.

சென்னை, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவரின் மகன், திரு. நடராசன் (வயது 61), அருள்மிகு ஸ்ரீ அத்திவரதர் தரிசனம் முடித்து, வீடு திரும்பும் சமயத்தில் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அரசு அமைத்திருந்த மருத்துவ

2019 ஜூலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

முகாமில் சிகிச்சை பெற்றார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள் இவருக்கு கடந்த 4 வருடங்களாக தீவிர இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய் இருந்ததாகவும், அதற்கென சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும், இன்று தரிசனத்திற்குப் பிறகு உடல்நலம் குன்றியதால் சிகிச்சை பலனின்றி இறந்தார் எனவும் தெரிவித்தனர்.

ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த திரு. சோமசேகர ராவ் என்பவரின் மனைவி, திருமதி கெங்கலட்சுமி (வயது 61), அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்து முடித்து, வீடு திரும்பும்போது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அரசு மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்றார். இவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், இவர் தீவிர இரத்தக் கொதிப்பு நோயாளி எனத் தெரிவித்தனர். இவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சேலத்தைச் சேர்ந்த திரு. வைகுண்டன் என்பவரின் மகன் திரு. ஆனந்த் (வயது 47), ஏற்கெனவே வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர். இவருக்கு இன்று வலிப்பு ஏற்பட்டவுடன் காஞ்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், 3–7–2019 அன்று ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியைச் சேர்ந்த திரு. சக்தி அஜய்குமார் (வயது 22) என்பவர் அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்தபின், மூலவர் தரிசனமும் முடித்துவிட்டு, படிக்கட்டில் இறங்கும்போது கால் தவறி விழுந்ததனால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக 108 ஆம்புலன்ஸில் அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். என்னுடைய உத்தரவின்பேரில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களும், சுகாதாரத் துறை செயலாளர் அவர்களும் மற்றும் அத்துறை இயக்குநர்களும் காஞ்சிபுரத்திற்கு நேரில் சென்று, அங்கு செய்யப்பட்டிருந்த மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை ஆய்வு செய்து, மருத்துவ வசதிகளை உறுதி செய்தனர்.

மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே, உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவிப்பதோடு,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 18

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற காரணத்தினாலே அங்கே முதியவர்கள், உடல்நலக் குறைவு இருக்கின்றவர்களும் காஞ்சிபுரம் ஸ்ரீஅத்திவரதரை தரிசனம் செய்ய வருகின்ற காரணத்தினாலே இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள், அதேபோல * மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்தவர்கள், உடல்நிலை குன்றியிருக்கின்றவர்கள் எல்லாம் இந்தத் தரிசனத்தை தயவுகூர்ந்து தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். ஏனென்று சொன்னால், கூட்டம் மிகுதியாக இருக்கின்றது. இன்றைக்கு 1.75 இலட்சம் பேர் தரிசனம் செய்ய வந்திருக்கின்றார்கள். பல மணி நேரம் காத்திருந்து, தரிசனம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, இப்படியிருக்கின்றவர்கள் எல்லாம் இந்த தரிசனத்தைத் தவிர்க்க வேண்டுமென்று ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கின்றார் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தரிசனம் செய்கின்ற அனைத்து பக்தர்களுக்கும் தேவையான வசதியையும், முன்னேற்பாடு வசதிகளையும் செய்து கொடுக்கின்றது என்பதைத் தெரிவித்து, திருப்பதியில்கூட ஏழுமலையானை தரிசிப்பதற்கு நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் பேர்தான் வருகிறார்கள். எல்லா ஏற்பாடுகளும் அங்கே இருக்கின்றன. ஆனால், காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் அருள்மிகு ஸ்ரீ அத்திவரதரை தரிசிக்க இவ்வளவு மக்கள் கூட்டம் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும், இருக்கின்ற கூட்டத்தை சரிசெய்து அனைவரும் தரிசனம் செய்ய வேண்டும் என்ற நிலையிலே அதற்கு போதிய வசதிகள் முழுவதும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

2017–2018 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் வெறும் 69.29 சதவிகிதம் மட்டுமே செலவிடப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அறிவித்த திட்டங்களை செயல்படுத்த இந்த அரசு முனைப்பு காட்டவில்லை என்பது தெரிகிறது.

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படும் பல்வேறு கடன் உதவித் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதில்லை. நுண்கடன் உதவிகளை உரிய பயனாளிகளுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடிக்கிறீர்களா, இல்லை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதிலுரையாற்ற அழைக்கட்டுமா? (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஏ) காஞ்சிபுரம், அத்திவரதர் தரிசன விழா, பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்ய ** வருவதைத் தவிர்க்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாகச் சொன்னேன். ** என்று நான் சொன்னதை மாற்றி 'மாற்றுத் திறனாளிகள்' என்று அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படுகிறது. மாண்புமிகு*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*